# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி

## மீனம்பாக்கம் , சென்னை - 600 061

## பயிலரங்க அறிக்கை

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியில் இளங்கலைத் பயிலும் மாணவர்களுக்காகத் தமிழ்த்துறையும் தமிழ் இணையக் கல்விக்கழகமும் இணைந்து சிறப்புப் பயிலரங்கம் கணினி ஆய்வகம் LAB 05- இல் 04/08/2023 அன்று ஏற்பாடு செய்திருந்தது. இப்பயிலரங்கில் புதுவை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் இணைப்பேராசிரியர் முனைவர் வ. தனலட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக ஜெயின் மகாமந்திரமும் தமிழ்த்தாய் வாழ்த்தும் ஒலிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி செல்வி சி. கயல்விழி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். இரண்டாம் ஆண்டு மாணவி செல்வி கு. கீதா வரவேற்புரை நல்கினார்.

கல்லூரியின் புலத்தலைவர் டாக்டர் எம். எம். ரம்யா அவர்கள் தலைமையுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கல்லூரியின் துணை புலத்தலைவர் முனைவர் ரெ. சுரேகா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்த்துறையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ. கோதண்டராமன் அவர்கள் சிறப்பு விருந்தினர் குறித்த அறிமுக உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் அவர்கள் "தமிழ்மொழித் தொழில்நுட்பக் கட்டற்ற மென்பொருள்" எனும் தலைப்பின் கீழ் மாணவர்களுக்குப் பல பயிற்சிகளை வழங்கினார்.

பின்னர் இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவன் கணேஷ் அவர்களும் மூன்றாம் ஆண்டு மாணவி ரம்யா அவர்களும் பயிலரங்கம் குறித்தத் தங்களது கருத்துகளை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டனர். பின்னர் தமிழ்த்துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ. கோதண்டராமன் அவர்கள் கணித்தமிழ்ப் பேரவையின் சார்பில் நிகழ்த்தப்பட்ட அனைத்து நிகழ்வுகள் குறித்த மிகவும் விரிவான அறிக்கையை வாசித்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்த்துறையின் சார்பில் நடத்தப்பட்ட கணினித்தமிழ்ப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சிறப்பு விருந்தினர் அவர்களும் கல்லூரியின் துணைப்புலத்தலைவர் அவர்களும் துறை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ. கோதண்டராமன் அவர்களும் இணைந்து பரிசுகளை வழங்கினர். அதனைத்தொடர்ந்து இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவன் ம. யோகேஷ் குமார் நன்றியுரை வழங்கினார். இறுதியாக நாட்டுப்பண் இசைக்கக் கருத்தரங்கம் இனிதே நிறைவடைந்தது.













அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் - II)


அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் - II)


அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல் - II)


கணித்தமிழ்ப் பேரவை


BenQ